RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சிலப்பதிகாரத்தில் மெய்யியல் உணர்த்தும் அவலச்சுவைகள்

ரா. சரஸ்வதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி, இந்தியா

# Tragic Aesthetics and Philosophical Thought in Silappathikaram

R. Saraswathi [a, *]

[a] Department of Tamil, Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli, India

* Corresponding Author:
r.saraswathy25@gmail.com

## ABSTRACT

Silappathikaram stands as a remarkable example of an epic that has endured across time, demonstrating how works with tragic endings can achieve lasting literary significance. Tragic emotion (avalachuvai) is an important aesthetic mode through which experiences such as suffering, loss, humiliation, injustice, and emotional anguish in human life are artistically represented. Among the eight forms of meyppāṭu (expressions of emotion) identified in Tamil literary theory, avalachuvai may be regarded as one of the most significant representations of human suffering. In this sense, Silappathikaram can be viewed as a comprehensive expression of tragic emotion. Ilango Adigal deserves particular appreciation for naturally portraying the tragic circumstances experienced by individuals and society within an epic framework. The life of Kannagi forms the central focus of tragic emotion in the epic. Kovalan's misguided decisions, the loss of wealth, and Kannagi's suffering following the death of her husband intensify the dimension of loss (izhavu). Kovalan's death is not merely an expression of personal grief; it also represents a broader social tragedy arising from the failure of justice. In the Madurai Kāṇṭam, the royal court itself becomes a setting for injustice, representing humiliation and degradation (iḷivu) as a significant dimension of tragic emotion. The unjust execution of the innocent Kovalan exposes the consequences of the misuse of political authority and the devaluation of human life. Kannagi's destruction of Madurai represents another dimension of tragic emotion, interpreted here as emotional disturbance or collapse (asaivu). The episode is not merely portrayed as an act of revenge but as a powerful response to the violation of justice and moral order. The poverty experienced by Kovalan and Kannagi further illustrates the impermanence and instability of human life, emphasizing the fragile nature of material prosperity and worldly existence. Overall, Silappathikaram presents tragic emotion not merely as an expression of sorrow or lamentation but as a profound philosophical and ethical aesthetic. Through suffering, loss, injustice, and moral retribution, the epic emphasizes virtue (aram), justice, moral responsibility, and social accountability. Thus, the tragic dimensions of Silappathikaram transform individual suffering into a broader reflection on human existence and ethical order.

**Keywords:** Silappathikaram, Justice, Moral responsibility, Kannagi

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள், மனித உணர்வுகளை நுணுக்கமாக வெளிப்படுத்தும் உயர்ந்த மரபைக் கொண்ட காலக் கண்ணாடியாக திகழ்கிறது. சங்க இலக்கியம் முதல் காப்பிய இலக்கியம் வரை, வாழ்வின் இன்ப-துன்ப நிலைகள், பல்வேறு சுவைகளின் வழியாக சித்தரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அவலச்சுவை மனித வாழ்வின் துயரப் பக்கங்களை, உள்ளத்தில் இரங்கல் சிந்தனையாகவும் பதியச் செய்கிறது. காப்பியங்களில் அவலச்சுவை கதையின் மைய உணர்வை ஆழப்படுத்தி, சமூகத்தை

சிந்திக்க வைக்கும் கருவியாக அமைகிறது. சிலப்பதிகாரம் ஒரு அறக் காப்பியமாக மட்டுமல்லாது, சமூக நீதியும் மனித மரியாதையும் குறித்த ஆழ்ந்த சிந்தனைகளை முன்வைக்கும் இலக்கியமாக விளங்குகிறது. இதில் நிகழும் துன்பங்கள் தனிநபரின் வாழ்க்கைச் சோகமாக மட்டுமல்லாமல், சமூக அமைப்பின் குறைபாடுகளை வெளிச்சமிடும் காப்பிய உத்தியாக மாறுகின்றன. ஆகவே, சிலப்பதிகாரத்தில் மெய்யியல் உணர்த்தும் அவலச்சுவைகள் எனும் தலைப்பில் சிலப்பதிகாரத்தில் அவலச்சுவைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆராய்வது இலக்கிய ரீதியாகவும் சமூக ரீதியாகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

## அவலச்சுவைகள்

மனித வாழ்வில் நிகழும் துன்பம், தாழ்வு, இழப்பு, மன வேதனை போன்ற அனுபவங்களால் உள்ளத்தில் இரங்கல் உணர்வை எழுப்பும் இலக்கியச் சுவையாக அவலச்சுவை அமைகிறது. இது வெறும் கண்ணீர் சுவை மட்டுமல்ல; அறம், நீதியின்மை, அதிகாரத்தை தவறாக பயன்படுத்தல் போன்ற சமூகச் சீர்கேடுகளை உணர்த்தும் உயர்ந்த அழகியல் அனுபவமாகும். இதனை தொல்காப்பியர்

"இளிவே இழவே அசைவே வறுமை என

விளிவில் கொள்கை அழுகை நான்கே" (தொல் 1199)

என்று மனித உணர்வுகளில் மெய்ப்பாடாக வகைப்படுத்துகிறார். இளிவு, இழவு, அசைவு, வருத்தம் ஆகியவை அவலச்சுவையின் முக்கிய உட்பிரிவுகளாகக் கருதப்படுகின்றன. இவ்வுட்பிரிவுகள் ஒவ்வொன்றும் மனித வாழ்க்கையின் வேறுபட்ட துயர நிலைகளை வெளிப்படுத்துகின்றன. இவ்அவலச் சுவையின் உட்பிரிவுகளைத் தனித்தனியாகவும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தும் காப்பியத்தின் முழுவதிலும் சிலப்பதிகாரம் பரவவிட்டுள்ளது. அந்திமாலைச் சிறப்பு செய்யும் காதையில் கணவனை பிரிந்த பெண்களின் அவல நிலையையும், புறஞ்சேரியிறுத்த காதையில் கண்ணகியை காட்டுக்கு அழைத்துச் செல்லும் நிலை ஏற்பட்டதே! என்று கோவலன் வருந்தும் நிலையும், துன்பமாலை பகுதியில் கோவலன் வரவில்லை என்று வருந்தும் கண்ணகியின் நிலையும், எனப் பல நிலைகளில் சிலப்பதிகாரம் அவலப் பண்பை வெளிப்படுத்துகிறது. இப்பண்பு பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் பொருந்தும் என்று கலித்தொகை

"செருஅச் செங்கண் புதைய வைத்துப்

பறாஅக் குருகின் உயிர்த்தலும் உயிர்த்தனன்" (கலித் 54 )

என்று கூறப்படுகிறது. மிகுந்த துயரத்தால் தலைவனின் சிவந்த கண்கள் மறையும் அளவிற்கு, கொல்லன் உலையில் ஊதும் கருவி போல பெருமூச்சு விட்டான் என்று நச்சினார்க்கினியர் விளக்குகிறார். அவலமான பெருமூச்சை ஊதுலைக் குருகுடன் ஒப்பிடுவது இலக்கிய மரபாகும். இளங்கோவடிகள் இந்த உவமையை பல இடங்களில் கொண்டு வந்து துன்பத்தை உணர்த்துகிறார்.

## சிலம்பில் இளிவுச் சுவை

மனிதனின் மரியாதை, மதிப்பு, உரிமை ஆகியவை புறக்கணிக்கப்படும் நிலையில் உருவாகும் அவல உணர்வே இளிவு என்பதாகும். சிலப்பதிகாரத்தில் இளிவுச் சுவை அரச நீதிமன்ற நிகழ்வுகளில் மிகத் தெளிவாக வெளிப்படுகிறது. குற்றம் நிரூபிக்கப்படாமலே கோவலன் கள்வன் எனப் பழிக்கப்படுவது, அவனுக்குரிய மனித மரியாதை மறுக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறது. அரசன் பாண்டியன், விசாரணை இன்றியே கொலைத் தண்டனை வழங்குவது, அதிகாரத்தின் தவறான பயன்பாட்டின் உச்சமாகும். இங்கு கோவலனின் உயிர் அரசின் முன் இழிவாகக் கருதப்படும் நிலை உருவாகிறது. இதனை

தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு

கன்றிய கள்வன் கையது ஆகின்,

கொன்று, அச்சிலம்பு கொணர்க ஈங்கு" எனக்

காவலன் ஏவக் கருந்தொழிற் கொல்லனும்

ஏவல் உள்ளத்து எண்ணியது முடித்து (கொலைக்களக் காதை151 - 155 )

இந்த இளிவுச் சுவை தனிநபரின் அவலமாக மட்டுமல்லாது, அரசியல் மற்றும் சமூக அமைப்பின் குறைபாடுகளை வெளிப்படுத்தும் கருவியாக அமைகிறது.

## சிலம்பில் இழவுச் சுவை

வாழ்க்கையில் பெற்ற முக்கியமான ஒன்றை இழப்பதால் உருவாகும் ஆழ்ந்த துயர உணர்வு இழவு எனப்படுகிறது. கண்ணகியின் வாழ்க்கை முழுவதும் இழவுச் சுவையின் தொடர்ச்சியான வெளிப்பாடாக அமைகிறது. கோவலன் தவறான பாதையில் சென்று செல்வத்தை இழப்பது முதல், அவன் உயிரையே இழக்கும் நிலை வரை கண்ணகி தொடர்ச்சியான இழப்புகளை அனுபவிக்கிறாள். கணவனை இழந்த ஒரு பெண்ணின் மனநிலை, அவள் அனுபவிக்கும் தனிமை, வேதனை, வாழ்வின் நிலையற்ற தன்மை ஆகியவை காப்பியத்தில் ஆழமாகச் சித்தரிக்கப்படுகின்றன. இதனை ,

என்றிவை சொல்லி அழுவாள் கணவன் - தன்

பொன்துஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக் கொள்ள,

நின்றான், எழுந்து! 'நிறைமதி வாள்முகம்

கன்றியது!' என்றவள் கண்ணீர் கையான் மாற்ற -

அழுதேங்கி, நிலத்தின் வீழ்ந்து, ஆயிழையாள் தன் கணவன்

தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கை யாற்பற்றப்

பழுது ஒழிந்து எழுந்திருந்தான் பல்லமரர் குழாத்துளான்,

'எழுதெழில் மலா உண்கண், இருந்தைக்க' எனப்போனான். (ஊர்சூழ் வரி 60 - 68 )

என்று அழுது புலம்பிய இழவுச் சுவை இங்கு தனிப்பட்ட துயரமாக மட்டுமன்றி, சமூக அநீதியை எதிர்க்கும் ஆற்றலாக மாறுகிறது.

சிலம்பில் அசைவுச் சுவை

அசைவு என்பது மன உளைச்சல், துயரம், கோபம் ஆகியவற்றால் மனித உள்ளத்தில் ஏற்படும் தீவிரமான கலக்கம் ஆகும். கோவலனின் அநியாய மரணத்திற்குப் பின் கண்ணகியின் மனதில் எழும் உணர்ச்சி அலைகள் அசைவுச் சுவையாக வெளிப்படுகின்றன. அவள் மதுரையை நோக்கி செல்லும் பயணம், அவள் உள்ளார்ந்த கலக்கத்தின் வெளிப்பாடாக அமைகிறது. இதனை

இன்புறு தங்கணவர் இடர்எரி அகம் மூழ்கத்

துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப் போல்

மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப,

அன்பனை இழந்தேன்யான் அவலம் கொண்டு அழிவலோ?

நறைமலி வியன்மார்பின் நண்பனை இழந்தேங்கித்

துறைபல திறம்மூழ்கித் துயர்உறு மகளிரைப்போல்

மறனொடு திரியும் கோல் மன்னவன் தவறிழைப்ப,

அறன் எனும் மடவோய் யான் அவலம் கொண்டு அழிவலோ?

தம்முறு பெருங்கணவன் தழல்லரி அகம்மூழ்கக்,

கைம்மைகூர் துறைமூழ்கும் கவலைய மகளிரைப்போல்.

செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறிழைப்ப,

இம்மையும் இசைஒரீ இ, இனைந்து ஏங்கி அழிவலோ?( துன்ப மாலை: 34 - 45 )

என்று துன்பமும் கோவமும் துயரமும் கொண்ட கண்ணகியின் நிலை அசைவு பண்பாக வெளிப்படுகிறது. இக்கையறுநிலையின் வெளிப்பாடு, மதுரையைச் சுடும் நிகழ்வு பழிவாங்கும் செயல் அல்ல நீதியின்மீது எழும் தார்மிக எதிர்வினையாகக் காப்பியத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வசைவுச் சுவை கண்ணகியை சாதாரண மனித நிலையிலிருந்து அறநெறியின் சின்னமாக உயர்த்துகிறது.

## சிலம்பில் வருத்தச் சுவை

வருத்தம் என்பது நீண்டகாலத் துயரத்தின் விளைவாக மனதில் நிலைபெறும் ஆழ்ந்த வேதனை ஆகும். சிலப்பதிகாரத்தில் மாதவியின் வாழ்க்கை வருத்தச் சுவையின் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. கோவலனை இழந்த பின், உலகியலிலிருந்து விலகி துறவற வாழ்க்கையை அவள் தேர்வு செய்வது, அவள் மனவருத்தத்தின் வெளிப்பாடாக அமைகிறது.

மற்றது கெட்டு, மாதவி மடந்தை,

நற்றாய் தனக்கு, "நற்றிறம் படர்கேன்;

மணிமே கலையை வான்துயர் உறுக்கும்

கணிகையர் கோலம் காணா தொழிக" எனக்

கோதைத் தாமம் குழலொடு களைந்து,

போதித் தானம் புரிந்து அறங் கொள்ளவும்; ( நீர்ப்படைக் காதை 103 - 108 )

இவ்வாறு தன்னை மட்டுமல்லாது தன் மகளான மணிமேகலையையும் துறவிற்கு கொண்டு சென்றதிலிருந்து ஆழ்ந்த வருத்தமும் அவலமும் புலப்படுகிறது. ஆண்குரங்கு இறந்து விட்டதையறிந்து பெண் குரங்கு தன் குட்டியைக் கிளையிடம் சேர்த்து விட்டு மலையின் உச்சியிலிருந்து வீழ்ந்து தற்கொலை செய்ய முயலும் அஃறிணையின் சால்பை,

"கருங்கட் தாக்கலை பெரும்பிறிது உற்றென,

கைம்மை உய்யாக் காமர் மந்தி

கல்லா வன் பறழ் கிளைமுதல் சேர்த்தி,

ஓங்கு வரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும்

சாரல் நாட! நடு நாள்

வாரல்; வாழியோ! வருந்துதும் யாமே!" (குறுந் - 69 )

என்று குறுந்தொகை காட்டும் உயரிய பண்பானது, பாண்டிய மன்னன் இறந்தவுடன், கோப்பெருந்தேவி, கணவன் சாவைக் கண்ட மாத்திரத்தில் உயிர் விடும் அவலப் பண்பாடாய் நின்று உள்ளத்தை உருக்குகிறது. கண்ணகியின் வாழ்விலும், அரசனின் தவறான தீர்ப்பால் ஏற்பட்ட அழிவுகளிலும் வருத்தச் சுவை நிரந்தரமாக நிலைபெறுகிறது. இச்சுவை காப்பியத்தின் இறுதியில் அமைதியான இரங்கலாக உள்ளத்தில் பதிகிறது.

## முடிவுரை

சிலப்பதிகாரம் அவலச்சுவையின் அனைத்துப் பரிமாணங்களையும் ஒருங்கிணைத்துக் காட்டும் உயர்ந்த காப்பியமாக அமைகிறது. இளிவு, இழவு, அசைவு, வருத்தம் ஆகிய அவலச்சுவைகள் தனித்தனியாகவும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தும் காப்பியத்தின் மைய உணர்வை உருவாக்குகின்றன. இளங்கோவடிகள் அவலத்தை இரங்கல் உணர்வாக மட்டுமல்லாது, அறம் மற்றும் நீதியை நிலைநாட்டும் இலக்கிய ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளார். இதனால் சிலப்பதிகாரம் காலத்தை கடந்தும் மனித மரியாதை மற்றும் சமூக நீதியை நினைவூட்டும் சிறப்புமிக்க காப்பியமாக விளங்குகிறது எனில் அது மிகையாகாது.

## References

அடியார்க்கு நல்லார் (உ.ஆ) சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும், உ. வே.சா. பதிப்பு, உ.வே.சா. நூல் நிலையம், சென்னை.

கதிர் முருகு (உ.ஆ)., சங்க இலக்கியம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.

தமிழண்ணல்(உ.ஆ)., தொல்காப்பியம் பொருளதிகாரம். மீனாட்சி புத்தக நிலையம் மதுரை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License